பதிவஞ்சல்

அனுப்புநர்,
திரு.பா.டேவிட் பாலசிங், எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,
முதன்மைக் கல்வி அலுவலர்,
தூத்துக்குடி.

பெறுநர்,
,கண்காணிப்பாளர்,
ஆர்.சி.பள்ளிகள்.,
தூத்துக்குடி

ந.க.எண். 3984 / ஆ3/07 நாள்.23.05..2007

அய்யா,

பொருள். தகவல் அறியும் சட்டம்– டிசம்பர் 1993ல் சம்பளத்தில் கையாடல் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் சம்பந்தப்பட்ட பள்ளித்தாளாளரிடம் தகவல் கேட்கப்பட்டது– சரியான தகவல்கள் இதுவரை கிடைக்கப் பெறவில்லை– நடவடிக்கை எடுக்கக் கோருதல்–சார்பு

பார்வை. தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம், 9, ரைஸ்மில் தெரு, திரு.எஸ்.பீட்டர் ராஜ் என்பாரது விண்ணப்பம் நாள்.28.04.2007– மாநில தகவல் உரிமை ஆணையத்திலிருந்து பெறப்பட்ட கடிதம் எண்.8496/07 நாள்.12.05.2007

*****************

பார்வையில் காணும் சென்னை, மாநில தகவல் ஆணையத்திலிருந்து பெறப்பட்ட தகவல் அறியும் சட்டம் சார்பாக, சாத்தான்குளம், 9 ரைஸ்மில் தெரு, திரு.எஸ்.பீட்டர் ராஜ் என்பாரின் விண்ணப்பம் நாள்.28.04.2007,கடித நகல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. இதில் அன்னார் கேட்டுக் கொண்ட தகவல்கள் இரு தினங்களில் சம்மந்தப்பட்டவருக்கு அனுப்பிவிட்டு அதன் நகல் ஒன்றினை இவ்வலுவலகத்திற்கும், சென்னை. மாநில தகவல் ஆணையத்திற்கும் அனுப்பிவைத்திட அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் அன்னார் 1993ம் வருடம் டிசம்பர் மாதத்தில் தூத்துக்குடி மாவட்டக் கல்வி அலுவலகத்தில் பெறப்பட்டதொகை ரூ.112/– இன்று வரை கிடைக்கப்பெறவில்லை எனவும் தெரிவித்துள்ளார். உடனடியாக அன்னாருக்கு மேற்கண்ட தொகையினை வழங்கிட உரிய நடவடிக்கை எடுத்து அதன் விபரத்தையும் இவ்வலுவலகத்திற்கும் சென்னை, மாநில தகவல் உரிமை ஆணையத்திற்கும் அனுப்பிவைத்திட அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

23/5

முதன்மைக் கல்வி அலுவலருக்காக
தூத்துக்குடி

2/23/5/07

இணைப்பு–கடிதநகல்

நகல். தாளாளர், புனித மரியன்னை மேல்நிலைப் பள்ளி, பொத்தகாலன்விளை–(கடித நகல் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது)
நகல். ஆணையர், தகவல் அறியும் சட்டம், புரசைவாக்கம், சென்னை–84 தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
நகல் திரு.எஸ்.பீட்டர் ராஜ்,. 9, ரைஸ்மில் தெரு. சாத்தான்குளம்